රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය

**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
Independence Square, Colombo 07, Sri Lanka

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | MPA/HRD/HR09/2024 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2024.02.07 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்
அரசாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள்
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்களின் தலைவர்கள்

**<u>பொதுத்துறையில் மனித வளத்தினை அபிவிருத்தி செய்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக 24/01/2018 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 02/2018 மற்றும் 30/11/2023 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 02/2018(1) இன் மீது தங்கள் கவனத்தை ஈர்க்கிறேன்.

02. அதற்கிணங்க, இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப செயற்படுவதற்கு உங்களுக்குக் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களின் பணிக்குழாத்தினருக்கும் தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்கும் உரிய பணிகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

03. மேலும், உங்கள் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களது தகைமை விருத்திக்காக, மனிதவள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல், தகைமை விருத்தித் திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் பயிற்சித் திட்டங்களை நடாத்துதல் தொடர்பான பொறுப்புக்களை ஏற்பதற்கு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை பெயர் குறிப்பிட்டு, குறித்த உத்தியோகத்தரது பெயர், பதவி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி பற்றிய தகவல்களை இந்த அமைச்சின் மனிதவள அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

දුරකතන / தொலைபேசி / Telephone: 011-2696211-13, 011-2166000
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2695279
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail: info@pubad.gov.lk
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.pubad.gov.lk

04. மேலும், தங்கள் நிறுவனத்திற்கு 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தி திட்டத்தின் மென் பிரதியொன்றை hrdpubadgovlk@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

05. பொதுச் சேவையில் மனித வள அபிவிருத்திக்கான உங்கள் ஆதரவை நான் மிகவும் பெறுமதியானதாகக் கருதுகிறேன்.

ஒப்பம்./ பிரதீப் யசரத்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு